அதற்கு மேற்பட்ட தொலேயுள்ள 15 புதிய பேருந்து வழித் தடங்கள் மாவட்டங்களில் தொடங்கப்பட்டன. அவை குறித்த விவரங்கள் :—

சென்னை	7
தஞ்சாவூர்	2
மதுரை	2
திருச்சி	1
நீலகிரி	1
கோயம்புத்தூர்	2
மொத்தம்	15

(இ) புதிதாகத் தொடங்கப்பட்ட 15 பேருந்து வழித்தடங்கள் அனைத்தும் தமிழ் நாடு அரசு போக்குவரத்து துறையினராலேயே நிர்வகிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

* 444 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள, புதுக்கோட்டைப் பகுதியில் எத்தனை உந்து வழித்தடங்களை அரசு தன் கைப்படுத்தியுள்ளது?

(இ) தனியார் துறையில் எத்தனை தடங்கள் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) மூன்று வழித்தடங்கள்,

(இ) 41 வழித்தடங்கள்.

THIRU T. MARTIN : When nationalisation is being attempted it is said that temporary permits are being issued to private operators indiscriminately. May I know whether the Government will take a decision either to issue permits on a long-term basis or to stop the issue of temporary permits to bus operators ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொள்கையளவான கேள்விகள் போடக் கூடாது என்று இருக்கிறது. 'பாலிசி மாட்டர்ஸ்'-லே துணைக் கேள்விகள் போடக் கூடாது.

THIRU T. MARTIN : I will modify my question. When nationalisation is being attempted, temporary permits are being issued to private bus operators. Every day they come to the court challenging the issue of temporary permits by means of writ petitions. May I request the Hon. Minister to state whether there is any proposal pending with the Government to stop the issue of temporary permits to private bus operators ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கூட பாலிசி மாட்டர்தான். சரி.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தேசியமாக்கப்பட்ட வழித்தடங்களைப் பற்றி வந்தபோது, புதிதாக சட்டம் போட்டோம். அந்தச் சட்டத்தின்படி, போதிய அதிகாரம் அரசுக்குத் தரப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் அப்படிப்பட்ட டெம்பரரி பெர்மிட் கொடுப்பது தவறு இல்லையா என்பது

பரிசீலிக்கப்பட வேண்டிய கருத்து ஆகும். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், புதிய சட்டத்தின்படி அதிகாரம் இருக்கிறது என்று வாதம் சொல்லியிருக்கிறோம். இந்திய தலைமை நீதிமன்றமும் இந்தச் சட்டம் செல்லும் என்று அறிவித்திருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்த பஸ் ரூட்டுகளை 75 மைலுக்குள் உள்ளவைகளைத் தவிர மற்றவைகளை முதலிலே எடுப்பது என்றும், பிறகு 50 மைலுக்கு மேல் உள்ளவற்றை எடுப்பது என்றும் சொன்னார்களே. எப்பொழுது அது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விகளும் இதற்கும் தொடர்பில்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, அரசுத்துறை வழித்தடங்களைத் தவிர, கூட்டுறவுத் துறையில் எக்ஸ்-சாவிஸ்மென் பஸ் சொசைடி, அரிசன் பஸ் சொசைடி என்று ஆரம்பித்தால் அவற்றை ஊக்குவிக்க எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவுத் துறையில் நடத்தும் பஸ்களுக்கு விதிவிலக்கு வேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்து, இப்பொழுது அது தேவையில்லை, தேசியமாக்குவது தான் சரி என்ற முடிவுக்கு வந்திருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், உடனடியாக எல்லா பஸ்களையும் சர்க்காரே எடுக்கக்கூடிய அளவில் இல்லை என்றாலும், எப்படி நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டியிருக்கிறதோ, அதே போல், ஒரு சர்விசுக்கு 5, 10 பஸ் என்கிற அடிப்படையில் அதற்கு உச்சவரம்பு கட்ட சட்டம் கொண்டுவர முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது கொள்கைபற்றிய கேள்வி.

திரு. ஜே. ஜேம்ஸ்: சார், 15 வழித்தடங்களை அரசு ஏற்று நடத்துகிறது என்று கூறினார்கள். மாநிலத்தில் 75 மைலுக்கு மேல் இருக்கும் வழித்தடங்கள் 15 தானா? அதிகம் என்றால், அவற்றை தேசியமாக்க முன்வராததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, 17----6----1969-க்குப் பிறகு 75 மைல்களுக்கு மேற்பட்ட 15 பேருந்து வழித்தடங்கள், அந்த ரூட் பர்மிட் முடிவடையும் காலத்தில் என்கிற அடிப்படையில் 15 தடங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அரசுப் பேருந்துகளில் திருக்குறள்.

* 445 வினா.—திரு. கே. போஜன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நம் மாநில போக்குவரத்துப் பேருந்துகளில் பொறித்து வைத்திருக்கும் குறளடிகளுக்குக் கீழே அதன் பொருளையும் சுருக்கமாக எழுதி வைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.